IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS :வாசா.1)

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 20.09.2024 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண்.82-2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எம்.புஷ்பாதேவி | தாலூக்கா | திருப்பூர் |
| தந்தை/கணவர் பெயர் | லத்தேஷ் | கிராமம் | திருப்பூர் கோட்டம் |
| தொழில் | சார்பு ஆட்சியர் பொறுப்பு திருப்பூர் கோட்டம் | மதம் | |
| வயது | | | |

வாசா. 1 ஆக 20.09.2024 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை மூலம் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வட்டம் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலராகவும் தற்பொழுது திருப்பூர் கோட்டம் சார்பு ஆட்சியர் (பொறுப்பு) பணியாற்றி வருகிறேன். 01.12.1969 ம் வருடம் சார்பு ஆட்சியர் பொள்ளாச்சி அவர்கள் உத்தரவிட்ட ராயன் மகன் ரங்கன் பெயரில் புல எண்.476/5 ற்கு 2.18 ஏக்கருக்கு கருமத்தம்பட்டி கிராமத்தில் கொடுக்கப்பட்ட ஸ்பெஷல் கண்டிஷனல் பட்டா 49454/69A8 ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய பணிக்கப்பட்டு இருந்தது. அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதன் நகலை அசலுடன் ஒப்பிடு செய்து உரிய அதிகாரியிடம் கையொப்பம் பெற்று சா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி சா.சா.ஆ.1 ல் கண்டிஷனாக திட்டங்களின் மேல் அடமானம் செய்யபபடும் நிலங்களில் குறித்த ரிஜிஸ்டர் 1 ம் பிரிவு நிலமானது தாழ்த்தப்பட்ட வகுப்புகளை சேர்ந்த நபர்களை தவிர வேறு எவருக்காகிலும் விற்பனை மூலமாகவாவது தான மூலமாகவாவது எவ்வகையான குத்தகை மூலமாகவாவது பாராதீனம் செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தனிநபருக்கு கொடுக்கப்பட்ட D நா.மூ.னா-வில் இல்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட நபர்களுக்கு கொடுக்கப்படும் நிலையான உத்தரவில் 5 ம் வரிசையில் உள்ளது. நிலமானது ஒப்படைப்பு தேதியில் இருந்து தானம், அடமானம் 10

வருட காலத்திற்குள் விற்பனை தானம், அடமானம் குத்தகை மூலமாக எந்த நபர்களுக்காவும் பாராதீனம் செய்யக்கூடாது மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளை சாராத ஒருவருக்கு அந்த காலத்திற்கு பிறகு பாராதீனம் செய்யக்கூடாது என்பது பற்றி குறிப்பிடும் ஆவணம் என்று வருவாய் நிலை ஆணையில் உள்ளது என்றால் ஆமாம். 1983 ம் ஆண்டு FILE RECEIVING REGISTER VOLUME 2 SERIAL NO 20 ல் FILE RECEIVE FROM பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ASSIGNMENT NO 49454/69A8 இந்த சொத்திற்கு தொடர்பான க.ச.எண்.476/5 ற்கு கொண்ட 2.18 ஏக்கர் கொண்ட கருமத்தம்பட்டி கிராமம் கோயம்புத்தூர் ரங்கனுக்கு வழங்கப்பட்டது அதை சார் ஆட்சியர் திருப்பூர் அவர்களால் பெற்றுக்கொண்டதற்கான பதிவேடு எங்கள் அலுவலகத்தில் பாதுகாக்கப்படும் என்றால் அதை நான் பார்த்தால் தான் தெரியும். அதை என்னால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதை தேடிப்பார்த்து தான் இருந்தால் தாக்கல் செய்ய முடியும். 1912 முதல் 1984 வரை உள்ள RSR, A-REGISTER கோயம்புத்தூர் மாவட்டத்தில் தான் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

D நா.மூ.னா- என்பது ஒரு தனி நபருக்கு வழங்கப்படும் பட்டா, இதில் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு கொடுக்கப்பட்டதாக குறிப்புகள் இல்லை என்றால் ஆமாம். D நா.மூ.னா- வில் தனிப்பட்ட நபர் எப்பொழுது விற்பனை செய்யலாம் என்ற குறிப்புகள் இல்லை என்றும் அந்த சொத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்று மட்டும் தான் உள்ளது என்றால் ஆமாம். அதன் உடன் இணைந்த சிறப்பு நிபந்தனையில் 10 வருடத்திற்கு மேலாக அந்த சொத்தை விற்பனை செய்ய வேண்டும் என்றால் RDO உத்தரவு பெற வேண்டும் என்று இல்லை என்றால் ஆமாம். D நா.மூ.னா மற்றும் சிறப்பு நிபந்தனையில் 10 வருடத்திற்கு மேல் அவர் வேறு யாருக்காவது விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளதா என்றால் அதில் இல்லை. REVENUE STANDING ORDER என்பது ஒரு பொதுவான விதி என்றால் நிபந்தனை பட்டா கொடுக்கப்படும் அனைத்திற்கும் இந்த RSO தான் பொருந்தும். இந்த நிபந்தனை பட்டாவில் வேறுபாடுகள் உள்ளது என்றால் ஆமாம். ஒவ்வொரு பட்டாவிலும் குறிப்பிட்ட நிபந்தனைகள் சொல்லப்பட்டுள்ள நிலையில் அது முன்னிற்குமா அல்லது RSO முன்னிற்குமா என்றால் RSO தான் பார்க்க வேண்டும். சா.சா.ஆ-1 ல் 1969 ம் ஆண்டு

கொடுக்கப்பட்டுள்ள நிலையில் 1979 ம் ஆண்டுடன் 10 வருட காலம் நிறைவடைந்து விட்டது என்றால் ஆமாம். 1979 ற்கு பின்னிட்டு நிபந்தனை காலம் முடிந்தவுடன் பட்டாதாரர் சொத்தை 3 ம் நபருக்கு விற்பனை செய்தால் அது செல்லத்தக்க ஆவணம் என்றால் இல்லை. முன் அனுமதி பெற்று விட்டு தான் அவர் கிரயம் செய்து கொடுக்க வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள சிறப்பு நிபந்தனை மற்றும் D நா.மூ.னா-வில் அவ்வாறான நிபந்தனை குறிப்பிடாத நிலையில் நான் மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை

1969 ல் பட்டா கொடுக்கப்பட்டு 1981 ல் சொத்து விற்பனை செய்யப்பட்டு இந்த வழக்கு 2021 ல் 40 வருடம் கழித்து தாக்கல் செய்துள்ளதால் அரசாங்கத்திற்கும் சரி வாதிகளுக்கும் சரி சொத்தை மீட்டெடுக்கும் உரிமை அற்றுபோய்விட்டது என்றால் இந்த சொத்து சூலூர் வட்டத்தில் வருவதால் இது சம்மந்தமாக எனக்கு தெரியாது.

3 ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/புஷ்பாதேவி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur